**O.P.54 of 2023**

Date : 04.02.2026.

ம.சா.1 : ஐயப்பன்

ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 23.05.2012 ம் தேதியில் திருமணம் நடைபெற்றது. திருமண காலத்தில் ஓசூர் TVS கம்பெனியில் பணி செய்தேன் என்றால் சரிதான். எந்த வருடம் வரை நான் மேற்படி கம்பெனியில் பணி செய்தேன் என்றால் 2020 ம் ஆண்டு வரை பணி செய்தேன். 2020 ம் ஆண்டுவரை என் வீட்டில் என்னுடன்தான் இருந்தார் என்றால் சரிதான். நான் என் தாயார் அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரியல்ல. நானும் எதிர்மனுதாரரும் மட்டும்தான் இருந்தோம். நானும் எதிர்மனுதாரரும் தனிக்குடித்தனம் இருந்தோம் என்ற விவரத்தை என்னுடைய முதல் விசாரனை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் மகனை பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தி எதிர்மனுதாரர் அழைத்து சென்றுவிட்டார் என்று கூறியிருப்பதில் எந்த வருடம் அழைத்துசென்றார் என்றால் 2016 ம் ஆண்டு என்று நினைக்கிறேன். ஓசூரில் உள்ள மகரிஷி வித்யாமந்திர் பள்ளியில் இருந்தும் மாவடியில் உள்ள CBSE கேம்ப்ரிட்ஜ் பள்ளியில் இருந்தும் படிப்பை பாதியில் நிறுத்தி அழைத்துச்சென்றுவிட்டார். தற்போது என் மகன் எந்த பள்ளியில் படிக்கிறார் என்றால் இந்து நடுநிலைப்பள்ளி திருக்குறுங்குடியில் படிக்கிறார். மாவடி பள்ளியில் இருந்து Fees கட்டாத காரணத்தினால் பள்ளி நிர்வாகத்தால் TC கொடுத்து அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை பள்ளி நிர்வாகத்தை விசாரணை செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். 2016 ம் வருடம் நான் மனுதாரரை அடித்து துன்புறுத்தி கூடுதல் வரதட்சனை கேட்டதாக கூறி காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது தவறான புகார் ஆகும். மேற்படி குற்ற வழக்கு தற்சமயம் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. முடிக்கப்பட்டுவிட்டது. ம.சா.ஆ.8 மனமுறிவு ஒப்பந்தம் இந்த வழக்கு தாக்கல் செய்யும் காலம் முன்பே என் கைவசம்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பற்றிய விவரத்தை நான் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆவணத்தில் கண்டுள்ள சரத்து படி நாங்கள் இரண்டுபேரும் நடந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. அதன்படி நான் அம்மா வீட்டில் இருக்கிறேன். அவர் குழந்தையை கூட்டிக்கொண்டு அவர் வீட்டிற்கு சென்று

விட்டார். பாத்திரம் பண்டம் நகை எல்லாவற்றையும் வாங்கி கொண்டு போய்விட்டார். ம.சா.ஆ 8 ஆவணத்தின்படி நாங்கள் நடக்காததால்தான் மனுவில் நாங்கள் அது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. மனுதாக்கல் செய்வதற்கு முன்பாகவே மகளிர் காவல்நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்தேன் என்றால் என் மனைவி பிரிந்து சென்று 2 வருடங்கள் ஆன காரணத்தினால் சேர்த்து வைக்க கூறி புகார் கொடுத்தேன். அதற்கான இரசீதுதான் ம.சா.ஆ.2 ஆகும். மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் எதிர்மனுதாரர் 2017 ம் வருடத்தில் இருந்தே என்னை விட்டு பிரிந்து வாழ்ந்து வருவதாக சொல்லியிருக்கிறேன் என்றால் 2020 ல் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறார். 2017 ம் ஆண்டு முதலே பிரிந்து சென்றுவிட்டார் என்று நான் ஏன் மனுவில் கூறியுள்ளேன் என்றால் அவர் அடிக்கடி விட்டு சென்றுவிடுவார். நான் எதிர்மனுதாரருக்கோ, குழந்தைக்கோ செலவுக்கு பணம் கொடுப்பதில்லை என்றும் அவர் அவரின் பெற்றோரை சார்ந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் போகும் போது நகைகளை எடுத்துச்சென்றுவிட்டதாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நானும் என் தாயாரும் சேர்ந்து எதிர்மனுதாரரை எனது தகுதிக்கு நீ தகுதியான ஆள் இல்லை என்றும் எனது வசதிக்கேற்று வேறு திருமணம் செய்து கொள்வேன் என்றும் கூறி துன்புறுத்திவந்தேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ-8 மனமுறிவு ஒப்பந்தத்தை என்னை யாரும் வற்புறுத்தி கையொப்பம் போடசொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் என் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரரை விவாகரத்து செய்யவேண்டும் என்று முன் திட்டம் இட்டுதான் அ.சா.ஆ-2 புகார் மனுவை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் ஒரு காலமும் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றால் சரியல்ல. 2017 ம் ஆண்டில் இருந்து எனக்கும் எதிர்மனுதாரருக்கும் , அவர் குடும்பத்திற்கும் சரியான பேச்சுவார்த்தை உண்டுமா என்றால் இல்லை. மேற்படி பேச்சுவார்த்தை சரியாக இல்லை என்று நான் கூறியிருக்கும் நிலையில் எதிர்மனுதாரரின் தாயாருக்கு 06.10.2020 ம் தேதி நான் எவ்வாறு ரூ.3 லட்சம் கொடுத்ததாக கூறியுள்ளேன் எனறால் சரியான பேச்சுவார்த்தை இல்லை என்றாலும் குழந்தையை பார்க்க எனது மாமியார் வருவதால் என் வங்கி கணக்கில் இருந்து அவர் வங்கி கணக்கிற்கு என் கம்பெனியில் இருந்து செட்டில்மென்ட் தரப்பட்ட பணத்தில் இருந்து ரூ.3 லட்சம் கொடுத்தேன். அந்த தொகைக்கு வட்டி எதுவும் வாங்கவில்லை.

மேற்படி தொகைக்கு வட்டி கேட்டு மிரட்டியதாக என் மீது மாமியார் திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் கத்தி எடுத்து குத்த வந்தேன் என்று புகார் கொடுத்து அது நிலுவையில் உள்ளது. 2015 ம் ஆண்டிற்கு பிறகு என் மனைவியையோ, குழந்தையையோ சரியான முறையில் பராமரித்தது கிடையாது என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை எதிர்னுதாரர்தான் எனது குழந்தைகளை Fees கட்டி படிக்கவைத்து வருகிறார் என்றால் அரசு பள்ளியில் படிக்கிறார்கள். நான் எதுவும் செய்யநினைத்தாலும் அவர்கள் விடமாட்டார்கள். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவின் பேரில் இடைக்கால பராமரிப்பு தொகையை 2025 ம் ஆண்டு 10 வது மாதத்தில் இருந்து கொடுக்கவில்லை என்றால் நான் கொடுக்கதயாராக இருக்கிறேன். வங்கி கணக்கு எண் கொடுத்தால் உடனே போட்டுவிடுகிறேன். என் குழந்தையின் பிறப்பு சான்று மற்றும் ஆதார் அட்டை ஆகியவை என் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. அவரிடம் தான் உள்ளது. அவை எல்லாமே என்னிடம் தான் உள்ளது என்றும் அதை அவர் என்னிடம் கேட்டதற்கு நான் கொடுக்காமல் அவரை அடித்து தரமறுத்ததால் 06.12.2024 ம் தேதியில் திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் நான் பையனை பார்க்க போகும் போது பார்க்கவிடாமல் புகார் கொடுத்தார்கள். எதிர்மனுதாரர் நான் குடியிருக்கும் ஒரே தெருவில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் உண்மையிலேயே எதிர்மனுதாரருடனும், குழந்தையுடனும் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றும் பொய்யான காரண காரியத்தின் பேரிலே எதிர்மனுதாரரை விவாகரத்து செய்யவேண்டும் என்ற காரணத்தினால் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை நான் குடித்துவிட்டு அடித்து துன்புறுத்தி வந்த போதிலும் எதிர்மனுதாரர் தனது குழந்தைகளின் எதிர்காலம் கருதி என்னுடன் கஷ்ட ஜுவனம் நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. என்னுடன் இருந்தால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற காரணத்தினால்தான் அவர் அவரின் பெற்றோர் வீட்டில் சென்று இருக்கிறார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு எவ்வித உண்மையான காரண காரியமும் இல்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.